[illegible]

~~Q22:4(?)~~
N16.
183642

4

1064

உ

கணபதிதுணை.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

நால்வர் நான்மணிமாலை.

பெரியநாயகி விருத்தம்,

பெரியநாயகி கலித்துறை,

பிக்ஷாடன நவமணிமாலை.

25 SEP 1918
MADRAS
29, VITHIYANATHA MUDALY ST. MADRAS

இரண்டாம் பதிப்பு.

கோ. செல்வரங்கம் அன்டு கோ,

அவர்களாற் றமது

சென்[illegible] [illegible]ரோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

[illegible]பிக்கப்பட்டது.

[illegible]18.

[illegible]ல அணா—1

இ23:417
N16.
183642

உ

சிவமயம்.

சைவசமயாசாரியர்களாகிய

நால்வர் நான்மணிமாலை.

25 SEP 1918
MADRAS

காப்பு.

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

நேரிசை வெண்பா.

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியல்
பாவான் மொழிஞானப் பாலுண்டு - நாவால்
மறித்தென் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு. (க)

கட்டளைக்கலித்துறை.

வீட்டிற்கு வாயி லெனுந்தொண்டை சாத்துசொல் வேந்த
பொது, ஆட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி,
நாட்டிற்கி லாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்,
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. (உ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

படியிலா நின்பாட்டி லாரூர னணிவிருப்பன் பரமனென்ப,
தடியனே னறிந்தனன்வான் றிருமுமீச னினைத்தடுத்தாட்
கொண்டு மன்றித், தொடியுலா மென்கைமட மாதர்பா
னினக்காகத் தூதுசென்றும், மிடியிலா மனைகடொறு மிரந்
திட்டு முழன்ற மையால் விளங்குமாறே. (௩)

நேரிசையாசிரியப்பா.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரண னுரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. (௪)

நேரிசை வெண்பா.

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின் - நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு. (௫)

183642

கட்டளைக்கலித்துறை.

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்கொல்வெள்ளேறுடையான், தனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்தவித் தாரணியில், நினக்கன்பு செய்கின்ற வப்பூதி யைச்சிவநேசமுறும், இனக்கன்பு செய்நம்பி யாரூர னேத்து மியல்பறிந்தே. (௬)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அறிந்து செல்வ முடையானு மளகைப் பதியாற் றேழமைகொண், டெழுந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டு மெனவிருந்து, துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா ரினைத்தோ ழமைகொண்டான், சிறந்த வறிவு வடிவமாய்த் திகழு நுதற்கட் பெருமானே. (எ)

நேரிசையாசிரியப்பா.

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசக மதற்கு வாச்சியம்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே. (அ)

நேரிசை வெண்பா.

இடுகாட் டெண்மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளரீடுவாற் சுட்டி - னெடுகாட்டும்
சம்பந்தா வென்புகின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு. (கூ)

கட்டளைக்கலித்துறை.

கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங் கொள்ளுமொரு, பிள்ளைக் கதுதகு நாவர சாய பெருந்தகையோய், கள்ளைக் குவளை யுமிழ்விழி யிற்படிக் காசொன்றுநீ, வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே. (கo)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றும், நீங்கிலுயி

ரெனும்பனவக் குலமகனை யாதி திரோதாயி யென்னு மொரு வெந்திறற்கூற் றுவனல், ஒங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி லுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந் தையொடுங் கூட்டாய், கோங்கமுகை கவற்றுமிள முலைப் பரவை மகிழக் குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே. (கக)

நேரிசையாசிரியப்பா.

கடனிற வண்ணன் கண்ணெனு னிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்தும்
அருமக ணறும்பூங் கருமயி ருதவியும்
நென்முளை வாரி யின்னமு தருத்தியும்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்தும்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்தும்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றும்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண

முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டனன்
இருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே. (கஉ)

நேரிசைவெண்பா.

மகிழ்ச்சி மிகவுண்டு போலு மெதிர்வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது - நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. (கங)

கட்டளைக்கலித்துறை.

தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னூரறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னேக்குதற்கே. (கச)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா னூற்பக வன்
ன நுண் மருங்குல், வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி

மாற்றுவான் சென்றன னென்றால், கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக் கொண்டதே தக்குநீ புகலாய், காக் கரு முதலை விழுங்கிய மதலை கான்றிடத் தோன்றுநா வல னே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்தலை குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
ஓதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
உளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. (கசு)

நேரிசைவெண்பா.

பயனுகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தாம் - உயிராகும்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகிழ்
வூட்டா மகிழ்சொல் விறைவனைப் பாடி யுவப்புறக்க

வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே. (கஅ)

கலிவிருத்தம்.

போதமுண்ட பிள்ளையென்பு பொருகண்மாது செய்ததோ
காதல்கொண்டு சொல்லின்மன்னர் கன்மிதப்ப வுய்த்ததோ
வாய்திறந்து முதலைகக்க மகனை நீ யழைத்ததோ
யாதுநம்பி யரிதுநன் றெனக்கியம்ப வேண்டுமே. (கக)

நேரிசையாசிரியப்பா.

வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கும்
அருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்தன்
அருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டும்
நீயே கோட நின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வே றுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்து றுநீழலிற் கொள்ளைகொள் வோயே. (உ0)

நேரிசை வெண்பா.

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா - வெள்ளமிடும்

ஏடேறப் பால்குறைந்த தென்றமுவ ரேகழுவின்
காடேறப் புக்கவரு கர். (உக)

கட்டளைக்கலித்துறை.

அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமனம்
உருகக் கடலன்பு பெற்றசொல் வேந்த வுனக்கரிதே. (உஉ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன்மீ திவரா
ஐனப்ப ருங்கயி லாய மடைந்தமை நின்றுகாண் குறவே
எனக்கு வந்து று மோமக வென்றமு கின்றநா ளலைபால்
தனித்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு தம்பிரா னலனே. (உ௩)

நேரிசையாசிரியப்பா.

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணின்
கண்களோ வொன்று காலையிற் காணும்
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி ஞென்று விழிப்பி னெரியும்
ஆயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த

பழுதில் செய்யு ளெழுதின னதனால்
புகழ்ச்சி விரும்பன் போலும்
இகழ்ச்சி யறியா வென்பணி வானே. (௨௪)

நேரிசைவெண்பா.

வானும் புகழ்புகலி மன்னன் றொடர்பொன்று
தேனுந் திதழியோன் சீரேடு - தானும்
கரியாய் மொழியுங் கரியாய் விடாமல்
எரியா ரழல்வீழ்ந் தெழுந்து. (௨௫)

கட்டளைக்கலித்துறை.

துடைவாழை மேன்வட வாரல்குற் பாம்பு தொடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெருகிலர் நச்சுகுலை
உடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயிர்
அடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே. (௨௬)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அரசன் பரிமேல் வரநெடுநல் யானை யெருத்தத் தமர்ந்து
போய், வரதன் கைலை மலையடைந்த மணியே மணிநீ ரிடு
பசும்பொன், திரைசங் கெறியுங் குளத்துவரச் செங்கற்
செம்பொ னுப்பாடும், பரிசின் றெனக்குன் செம்பவளத்
திருவாய் மலர்ந்து பகர்வாயே. (௨௭)

நேரிசையாசிரியப்பா.

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குறுகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்

களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
அன்ன மாடு மகன் றுரைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லர்லே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர்திரு வுடையர்
நெஞ்சத் தவல மிலரெனும்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே. (உஅ)

நேரிசைவெண்பா.

தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியும்
ஆனேறி யாண்டுப்பெற் றான்கொனீ - தானேறும்
வெள்ளைமணி யென்று வினவுவோம வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின். (உகூ)

கட்டளைக்கலித்துறை.

பெற்றா னினைப்பெற் றவர்போற் பெறவும் பிறப்பதுண்
டேல், நற்றா ரணியி னினைப்போற் பிறப்பது நல்லகண்
டாய், செற்றார் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரே,
பற்றா மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே. (௩0)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாவாய்ப் பொழிந்த வானமுதப் பவளத் திருவாய் நம்பிநீ, சேவாய்ப் பொருதுந் தருமமுடைத் தேவன் மலைக்குப் போம்பொழுது, காவாய்ப் பயந்த தடக்கைமலர்க் கழிற் றறிவார் கடாவிவரு, மாவாய்ப் பிறக்கக் கிடையாதே மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே. (௩௧)

நேரிசையாசிரியப்பா.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. (௩௨)

நேரிசைவெண்பா.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை - மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து. (௩௩)

கட்டளைக்கலித்துறை.

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளால்
சார்ந்து சமண்விட் டுறுமுனக் கேவருஞ் சைவநலம்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குரவுமுனம்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனும்

அல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன் றானே. (௩௫)

நேரிசையாசிரியப்பா.

தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே. (௩௬)

நேரிசைவெண்பா.

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்கள் - எல்லாம்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னும்
ஒருஞான சம்பந்த முற்று. (௩௭)

கட்டளைக்கலித்துறை.

உற்றா னலன்றவந் தீயினின் றானல னூண்புனலா
அற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென் றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே. ()

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி பெரிதுவந்
தன் றிருவடித்தா மரையைப் போற்றி, விரைமலர் தூய் வந்
தனைசெய் கின்றா னென்றால் விளங்கிழையா ரிருவரொடு
முயங்க லாமோ, உரைமதிசின் றனைவெறுப்ப தென்கொ
ளின்னை யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயின், சூரா

முனிவர் பரவவுறும் பெருஞ்சீர்த் தொண்டத் தொகை
செய்தோ யறமுதனூல் வகைசெய் தோயே. (ஙகூ)

நேரிசையாசிரியப்பா.

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. (சo)

தேவாரம் திருவாசகம் என்கிற தமிழ்வேதஞ் செய்தருளிய சைவசித்தாந்த சமயாசாரியராகிய நால்வர்களிலே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசு நாயனருக்குக் கட்டளைக்கலித்துறையும், சுந்தரமூர்த்தி நாயனருக்கு விருத்தமும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அகவலுமாகத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த நால்வர் நான்மணிமாலை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசன் திருவடிவாழ்க.

ஆவணக் காப்பக 182642

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விருத்தகிரி

பெரியநாயகியம்மை விருத்தம்.

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன் முக்கணாண் டகைநின தெழில்கூர், முகம்புலர் தலைக்கண் டெல்வளைந் தடியின் முனைப்பிறைக் கோடுகொண் டெழுது—, விழுமணி யரவ நுழைசடா டவியின் விண்ணதித் தண்புனல் விடுப்ப, விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினான் மென்கொடி யெனநினை யுணர்ந்தேன்—, செழுமணி நீலமழைமுகி றவழுஞ் சிவம்பெனும் புற்றினின் றூர்ந்து, திரைபொரு கடற்பேர்ப் பெரும்படம் விரித்துத் தினமணி யெனப்படுஞ் செங்கேழ்—, கெழுமணி யுமிழ்ந்து பேரிரு டெரந்து கிடக்குமெய்ம் முடக்குமா சுணமாய்க், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநாயகியே. (க)

விழைவொடு நினக்கு மாதுலன் மாமி வெற்புவேண் டுருதுதன் மருகன், மேலெலா மெலும்புந் தோலுமாய்க் கிடத்தல் வெறுத்திடா திளமைநா டாது—, பழமலை தனக்குச்

சாதியொப் பெனவே பார்த் துனைக் கொடுத்ததுன் றந்தை, பனிமலை யென்னோ தன்மனை யாட்டி பயந்திடப் பெருமக ளென்றோ—, கழைவரை முன்ன ரூன்றுபு நடந்து கடிது பள் ளங்களின் வீழ்ந்து, கரைகளின் மெல்ல வேறிவெண் ணுரைவாய்க் கடையுற வளைந்துருத் திரைந்து—, கிழவுரு விருத்த நதியெனப் பட்டுக் கீர்த்திமூ வுலகினும் போர்ப் பக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரிய நா யகியே. (௨)

காமமென் கின்ற கதுவுவெந் தீயுங் கடுஞ்சின மெனப்படு புலியும், களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக் கறையடிக் களிநல்யா னையுமே—, தாமிகு மெனது மனமெ னும் வனத்திற் றனிவரல் வெருவினை யாயின், தழலினின் ருடிப் புலிகரி யுரியோர்த் தடுத்தவாண் டுணையொடும் வரு வாய்—, ஈமவெள் ளெலும்பங் கிடப்படு மெனத்தா னெலு ம்பணி கடவுண்மா நதியாய், இருந்துநல் லன்னங் கொண் டுமெய் வெளுப்ப விணைதபு கங்கையை யிகழ்ந்து—, கீழ் மைசொல் கின்ற தொன்றுமின் ருயிற் கிடைக்குமோ வித ன்குண மென்னக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௩)

சுட்டுதற் கரிய நின்னைமெய்ஞ் ஞான சொரூபியென் றரு மறை யனைத்தும், சொல்லுவ துண்மை யென்னநன் குணர் ந்தேன் சுரந்தநின் றிருமுலைச் செழும்பால்—, வட்டிலிற் கொச்சைப் பிள்ளைமுன் னுண்டு வண்புகழ் ஞானசம் பந்த, வள்ளலென் றிடப்பேர் பெற்றநன் மொழிபோன் மையறீர்

செய்யுள்செய் தமையால்—, எட்டிநற் றிகிரி பறித்தெறிந்
தாற்கா லியானையை யுருட்டிவாங் குதிரை, எறிந்துசங்
கதிர்த்துக் கொடுமர முறித்திட் டெதிர்ந்திடார் தமை
விடுத் தோடிக்—, கிட்டினர்ப் புரட்டி முருகவேள் பூதக்
கிளைப்பெரு வெள்ளமொத் தெழுந்து, கிளர்மணி முத்த
நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (ச)

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா முறுகுழி
மேடுக ளிரவி, ஒழிவிலா வாய்மை மெழுக்கினும் பூசி யுயர்
தரு மனமெனப் படுமோர்—, பள்ளிமென் றவிசி லிருத்தி
யின் பதியைப் பழுதில்யா னெனப்படு நெல்லைப், பழமல
மாயைத் தவிடுமி போக்கிப் பாகஞ்செய் தென்றருத் திடு
வாய்—, துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர் சூழல்
வெண் ணெய்க்குட முருட்டித், துணைமுலைக் குவட்டின்
மஞ்சண்மேற் படப்போய்த் தோய்ந்துநின் முடிளங் கயற்
கண்—, கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக்
கேடில்சீர்க் கண்ணனு டெல்போல், கிளர்மணி முத்த நதி
யுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (ரு)

நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு நல்கிய தந்தையுந்
தாயும், நம்பனு நீயு மல்விர் நும் மூர்க்கே நவின்றவம் முறை
யுளீர் நீவிர்—, பாடியா ரனைஞ்சொ லிண்டுமாய் வனதாம்
பரிந்துநி மடிமிசைக் கிடத்தப், பழமலை தனது பெயர்வலக்
காதிற் பகர்ந்தருள் செயப்பெறுஞ் செயலால்—, ஓடியோர்
காக மேறுபுகவிழ்த்த வொருசிறு கரகநீர் தானும், ஒருவ

னோர் செவியால் விடுத்தவப் புனலு முமையொரு பாகர் கட் டோன்றிக்—, கேடிலா நந்த வுருவமா மெனையொக் கின்றன வோவென வதிர்த்துக், கிளர்மணி முத்த நதி யுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (சு)

தன்னொரு மகன்வா கனத்தினை வெறுத்தோர் தநயன் வா கனத்தினை விரும்பும், தண்மணிப் பணியு மதனையுள் வெருவித் தான்வள ராமதி யமும்வாழ்—, மின்னவிர் சடையான் றனைநினை யன்றி மேவுவா னவரைநெஞ் சுன் னல், விரிகதிர் விழுங்கு மணியினை விடுத்து வெறுமணி கொள்ளுமா றன்றே—, மன்னவர் மனிதர் சந்திரன் பரிதி மகபதி மலரயன் மறலி, வானவர் வசுக்கள் சித்தர்கிம் புருடர் மாதவர் விஞ்சய ரசுரர்—, கின்னர ருரகர் மூழ்கு பே ரரவங் கேட்டொரு முராரிபாய் சுருட்டக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (எ)

படைத்திடுந் தொழிலோன் மறைச்சடங் கியற்றப் பாவி யேன் மனத்தினும் வலிய, பன்மணி குயின்ற செம்பொ னம் மியினின் பதமலர் வைத்தக லாமல்—, இடத்தினி லுனைவைத் தருளுதன் முன்னே வியற்பகை மனைவியை யிரந்தான், இளம்பிறை சூடு மிறையவன் பின்ன ரெங்கு னம் போயிரந் திடுவான்—, கொடுத்தெனி விடுபொன் புல வனுக் காரூர்க் குளத்தினிற் பழமலை யன்று, கொடுத்தது நானே கொடுத்தன னென்னிற் குளித்தகல் பவர்குளத் தெல்லாம்—, கிடைத்திட வொருகண் டருமெனக் கிது செப் கின்றதற் புதங்கொலோ வென்னக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (அ)

பண்டுசின் கொழுநன் றந்தையுந் தாயும் பயந்ததம் மருமருந் தன்ன, பாலனைக் கொன்று சமைத்திடக் கொள்ளும் பாதக மொன்றுளங் கொண்டு—, தொண்டர்தம் மனையிற் செல்வனென் றெழுசின் சுதனழப் பொழுதுசின் முலைப்பால், சுரந்தமு தூட்டு மன்னைநீ யாவாய் தொழுதுபோய்ப் பிரித்திலை யென்னே—, அண்டர்தங் கங்கை யன்னமங் கதன்க ணுடல தன்னைவந் தடையா, ஆடியிங் கிதன்க ணமர்வுறப் பெறலா லடைந்துவான் கங்கையை யிகழ்ந்து—, கெண்டையொண் வாளை யுடனெழக் குதிப்பக் கிளைவளைக் கமுகின்மேற் றவழக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (கூ)

புரிசடைக் காட்டு ளாடவிட் டிளவம் புலியினைச் சிறப்புலி யொடுகோட், புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப் புலிபனி மலையிள மானைப்—, பரிவுறத் தொழுது மருவிய வதனற் பயமறச் சாதிக டனது, பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து பசுவெலா மருவுறப் பெறுமே—, சுரிகுழற் கயற்கட் பிறைநுதற் கனிவாய்த் துடியிடைக் குவிமுலைத் தளிர்க்கைத், துணைவிமுற் கங்கை பெயர்சொலக் கூசுஞ் சுடர்மணிக் கட்செவிப் பணியான்—, கிரிமகட் கடுத்த கறைமிடற் றிறைவன் கிளக்குமேற் புகழெனத் தோன்றிக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (கο)

பெரியநாயகியம்மை விருத்தம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

விருத்தகிரி

பெரியநாயகியம்மை

கட்டளைக்கலித்துறை.

இறைவர்க்குத் தக்க விறுமாப் பெனுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற தாமிறு மாப்பனெனக்
குறைவற்றநெற்கொண்டுலகேற் றுனைப்பலிகொள்ளுமரன்
பெறவுற் றனையனை யேகுன்றை வாழும் பெரியம்மையே.()

பத்தற்கு நெஞ்ச மலர்மீ திருத்திப் பயந்துகொடும், சித்
தர்க் ககலுநின் பாதாம் புயமொரு செஞ்சிலைமேல், வைத்
தற்கு மெண்ணி மதியுடை யேனென்பன் வார்சடையான்,
பித்தர்க்குத் தங்குண நூலினுஞ் செம்மை பெரியம்மை
யே. (௨)

இழைபொறுத் தாற்பொறை தானென்ப ரானல் விசைப்
புலவர், மழைபொறுத் தார்புனன் முக்காற் பொறுக்கும்
வழக்க துண்டே, உழைபொறுத் தார்நல் வியற்பகை யார்
மனைக் குற்றவொரு, பிழைபொறுத் தாய்நன்று காண்குன்
றை வாழும் பெரியம்மையே. (௩)

கையன்று தாமரை கண்ணன் றிளமென் கயலெனவே,
பொய்யன்று கங்கையை நீரென்று சாதிப்பர் போர்விடை

வார், மெய்யென்று நீகொண் டிரேலற வாயினென் மென்கையிடைப். பெய்யென்று பின்னை யறிவாய்தென் குன்றைப் பெரியம்மையே. (௪)

பொன்வாங்கு செஞ்சடைப் பாம்புகள் சுற்றும் புதுமதியி, னன்வாங்கு கோடு கிழிக்கு நகுவெண் டலைபடுங்கல், முன்வாங்கு மெந்தைநின் பாதாம் புயத்தின் முடிவணங்கின், பின்வாங்கி நில்லன்ன மேகுன்றை வாழும் பெரியம்மையே. (௫)

கடினறு மென்றரு மீதிருப் பாரெனக் கங்கையென்பாள், முடிநடு வேறி யிருந்தனள் வேனின் முதிர்விலதன், அடியடை வாரெனச் சங்கரன் பாங்க ரமர்ந்தனை நீ, பிடிநடை யேகுயி லைகுன்றை வாழும் பெரியம்மையே. (௬)

நின்போ லிலரரு ளாளரென் றேசொல நின்கொழுநன், என்போ னொருவன் மகன்பூங் கழுத்தினை யீர்வலென்றே, அன்போ சிறிது மிலனாகப் போக வதற்கிசைந்து, பின்போய் விடாதுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே. (௭)

செச்சை மலர்புரை வாணொடு மேனி திறந்துகொண்டு, கச்சை யரவொன் றசைத்துக் கபாலங் கரத்தெடுத்துப், பச்சை மயிலனை யார்மனை தோறும் படர்ந்திரக்கும், பிச்சை யொழிகென் றொருவார்த்தை சொல்லெம் பெரியம்மையே.

சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுதற்கில்லை, ஓதிற் பிறரென வச்ச முறும லுயிர்களெல்லாம், நீதிப் புதல்வர்க ளாயின வாதலி னீகொள்கற்புப், பேதிப்ப தன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே. (௯)

நின்னேய நாயக னென்றிருப் பாய்நினை நீத்தகன்று, தன்னேரில் பூவணத் தேயன்று போய்ச்செய்த தன்மையெல்லாம் சொன்னேன லேனினி நின்னோ டொளிப்ப தென் சொல்லுவன்யான், பின்னே தெனக்குத் தருவாய் தென் குன்றைப் பெரியம்மையே. (௧௦)

நற்றவத் தன்னைப் பெருமலைக் கென்னமுன் னல்கியுனைப், பற்றறக் கொண்ட தெலும்பே யணியும் பழமலைதான், சற்றெனக் கையர் தராதுசொன் னாம்மலைச் சாதியுள்ளே, பெற்றவர்க் கென்ன முலைவிலை குன்றைப் பெரியம்மையே. (௧௧)

கற்றா ரறிகுவர் நன்மக்கட் பேறெனக் கட்டுரைத்த, சொற்றா னொருபெண் ணொழித்ததென் பாரோடு தொல்லுலகில், நற்றாண் மகப்பெறு கென்றாசி சொல்பவர் நாணவுனைப், பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே. (௧௨)

கரிய மிடறுடைப் பெம்மான் கரத்துழைக் கன்றொடுமோர், அரிய முடியம் புலியோடு மேவினை யாடுகின்றாய், தெரிய வரிய பதினா லுலகுமென் சிற்றிலென்பாய், பெரியவ ளென்ப துனக்கேது குன்றைப் பெரியம்மையே. (௧௩)

தண்ணா ரிதழி புனைவான் விழியிணை தம்மனைகள், பண்ணா வழிக்குமென் றோநின் றிருமுக பங்கயத்தில், கண்ணா யினளுனக் கவ்வலை மாதுங் கலைமகளும், பெண்ணா ரமுதனை யாய்குன்றை வாழும் பெரியம்மையே. (௧௪)

உஉ பெரியநாயகியம்மை கட்டளைக்கலித்துறை.

உள்ளத் துறுபிணி யேற்கு மருந்துக்கென் றுன்னை வந்து, மெள்ளத் தொழவுந் திருமுலைப் பான்மெல் விரனுதி யால், தெள்ளித் துளியள வாயினுந் தொட்டுத் தெறித்தி லையுன், பிள்ளைக்குங் கிள்ளைக்கும் பால்கொடுத் தாலென் பெரியம்மையே. (கரு)

ஆருத் துயர்கொண் டடியேன் சலிப்ப வதுசெவியில்
ஏறும் வேயிருந் தாலென்செய் வேனெங்க ளீசற்கொரு
கூறுகி யண்ட முதலா யிளமை குலவுதவப்
பேறுகி வாழ்பவ ளேகுன்றை வாழும் பெரியம்மையே. ()

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன் றருமிரு நா ழிநெல்லால், வினைமாட்சி கொண்டெயி றெல்லா மளித்த ருண் மேன்மையினுல், மனைமாட்சி யெய்து முனக்கே பெ ருங்கருபு மாட்சியன்றிப், பினைமாட்சி யார்க்குண் டுலகீன்ற குன்றைப் பெரியம்மையே. (கஎ)

நெடிய விலங்க லொருசிலை யாக்கிய நின்பதிமேல், கொடி யவ நங்கன் சிலைபோ யெடுத்துமுன் கொண்டெதிர்ந்த, ஒ டிவி லருஞ்சிலைச் செங்கரும் போசொல் லுனதுநடுப், பிடி யு ளடங்கிய தென்னிது குன்றைப் பெரியம்மையே. (கஅ)

பண்டகு வீணை யொடுபொட வந்தவப் பாமடந்தை, கண் டழு மாறு மதிநிறை போலக் கவின்கனியும், வெண்டலை மாலை கிடந்தொளிர் தோளிக்கு வீங்குமுலைப், பெண்டகை மாமணி நீகுன்றை வாழும் பெரியம்மையே. (கக)

பெரியநாயகியம்மை கட்டளைக்கலித்துறை

முற்றிற்று.

உ

சிவமயம்.

பழமலைநாதர்

பிக்ஷாடன நவமணிமாலை.

நங்குற்றந் தீர்க்கும் பழமலை நாதற்கு நற்பலிகொண்
டங்குற்றுமென் றுகில் போக்கினள் வெற்றரை யாகியந்தோ
இங்குற் றனையென வெம்பெரு மானிவ் விருநிலத்தில்
தங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே.()

ரு முதுகுன் றுடையா னிலாதவெண் கோவணத்தான்
ரு மரைக்கை விரன்மூன்று காட்டித் தனங்குறித்து
ரக வித்தனை பிச்சையுண் டோசொன் னறுநுதலாய்
ரு னிரண்டத் தனையுள கோடியென் றிட்டனளே. (உ)

இப்பாத் திரந்தலை கீழாப் பிடித்தனை யென்னைமுனம்
தப்பாப் பலிகொண் டறிந்திலை யோவெனத் தாழ்குழலாள்
செப்பார் பணைமுலை யாய்நிலத் தேபலி சிந்தியிட்டாய்
எப்பாத் திரத்திலு மிட்டறி யாய்கொன்முன் னென்றனரே.

வேட்டன மாதுகை தாழ்த்திட மாமுது வெற்பர்பலி
ஒட்டினை நீதொட லாமோ மெனவுமை யுந்தொடலாம்
வீட்டினில் யானென வேயவர் தாமிது வேண்டுவைகொல்
ஆட்டினின் பாலென மூலமு மாமென்ப தென்றனரே. (௩)

மாண்ட வெலும்பணி கோலமோ டேபலி வாங்கிடுதற்
கீண்டு வருமுது குன்றுடை யீருமை யான்மிடற்றில்
நீண்ட வுகிருறுத் தாதனை வேனென்று நீர்தலையைத்
தீண்ட வுமது பலிப்பாத் திரமென் சிரிக்கின்றதே. (௫)

வானோர் தொழுகின் பலிப்பாத் திரத்தை வனைந்ததுநீ
தானோ வெனச்சக் கரந்தான் சுழற்றத் தகுங்குயத்தி
யானோர் குயவன்மெய் யென்றே முதுகுன் றிறையியம்ப
நானோ வொருசிற் றிடைச்சியென் றுளங் நறுநுதலே. (௬)

பங்கய மன்ன விழியார் முதுகுன்றர் பாத்திரத்தில்
அங்கையி லைய மொடுவெண்டு வீழநல் கையவென
எங்கையில் வந்த தெமதாக வேவழக் கென்றுசெட்டி
மங்கையர் தங்கட் கிருக்கூ டலிவிட வைத்தனரே. (௭)

நீருக்குத் தக்க சடையார் முதுகுன்றர் நேடியுங்கள்
ஊருக்குட் பிச்சையென் றுற்றேருமுண் டாயி னுரைமினென
வாருக்குத் தக்க முலையா ரதற்குளர் மற்றொருவர் [ன
யாருக்குக் கிட்டு மதுசோறு நீர்கொளு மென்றனரே. (௮)

முழங்குந் துடியொடு பிச்சையென் றேமுது குன்றர்வரச்
சழங்கு முலைமுதி யாளென் பலியெனத் தம்மனையில்
வழங்கு மனமென் றனர்புறம் போந்து வளர்முலையாள்
விழுங்கு மனம்பகற் போதுகொள் வாயென்று வேண்டின
[ளே. (௯)

பிச்சா டனநவ ரத்தின மாலையைப் பீடுபெறத்
தைச்சான் றுறைமங் கலமுறை சீவ தயாபரனும்
பொய்ச்சார் பதனை யொழிக்குஞ் செழும்புலி யூர்ப்புனிதன்
நற்சார்பு சார்ந்த சிவப்பிர காச நவமணியே.

பிக்ஷாடனநவமணிமாலை

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

புத்தகவிளம்பரம்.

	ரூ.	அ.	பை
ஸ்ரீவரகுஷாமிர்தம்	4	0	0
திருக்கடந்தை புராணம் உரை	0	8	0
சானந்தகணேசர் புராணம் உரை	0	12	0
சேதுபுராண வசனம்	2	0	0
கருணீகர் புராணம்	0	2	0
ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தூது உரை	0	4	0
சின்னசாமி சாஸ்திரியார். கீர்த்தனை	1	0	0
சிவநாமசங்கீர்த்தனம் (படத்துடன்)	0	4	0
நந்தனார் சரித்திரக் கீர்த்தனை (படத்துடன்)	0	6	0
மாயாப்பிரலாபம் (பழைய பதிப்பு)	0	2	0
சோணசைல மாலை	0	1	0
சரஸ்வதியந்தாதி	0	0	6
நன்னூல் மூலம் (பாக்கெட் அளவு)	0	1	0
சப்தரிஷிவாக்கியம் 5,500-பாடல்	4	0	0
சகாதேவர் சாஸ்திரம்-108	0	4	0
சத்தி ஆரூடம்	0	1	0
ஜெயமுனி சோதிடம்	0	2	0

நாடு ஆவணக் காப்பக நூலகம்

இவை தவிர தங்களுக்குவேண்டும் பலவித புத்தகங்களும் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். அரை ரூபாய் தொகைக்குக் குறைந்த புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்ப முடியாது. அரை அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்குஇரண்டுவித கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும். மற்ற விஷயங்கள் கேட்லாக்கில் கவனித்துப் பார்க்கவும்.

கோ. செல்வரங்கம் அன்டு கோ, அவர்களது
மனோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,
நெ-29, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

8B
9-19